## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

<table>
<tr><td colspan="4">2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிச்செல்வி என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>ஹேமலதா</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**12.03.2026 MC 5/2025 ம.சா.1 ஹேமலதா**

**முதல் விசாரணை :**

நான் இந்த நம்பர் மனுவின் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு 1 ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபணம் வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

1) கடந்த 27.08.2017 ம் தேதி திருமண பத்திரிக்கை அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி திருமண பத்திரிக்கை அசல் ம.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) கடந்த 27.08.2017 ம் தேதி திருமண புகைப்படம் அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி திருமண புகைப்படம் அசல் ம.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3) கடந்த 06.08.2018 ம் தேதி இளவர் 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி இளவர் 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

4) கடந்த 14.09.2023 ம் தேதி இளவர் 2ம் மனுதாரரின் ஆதார் அடையாளஅட்டை நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி இளவர் 2ம் மனுதாரரின் ஆதார் அடையாளஅட்டை நகல் அசலுடன் ஒப்புமை செய்து ம.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5) இளவர் 2ம் மனுதாரருக்கு கல்விக்கட்டணம் செலுத்தியதற்கான இரசீதுகள்(6 Nos.) அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி இளவர் 2ம்**

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.12 15:01:39 +0530

**மனுதாரருக்கு கல்விக்கட்டணம் செலுத்தியதற்கான இரசீதுகள்(6 Nos.) அசல் ம.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

6) இளவர் 2ம் மனுதாரருக்கான பள்ளி பேருந்து கட்டணத்திற்கான இரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி இளவர் 2ம் மனுதாரருக்கான பள்ளி பேருந்து கட்டணத்திற்கான இரசீது அசல் ம.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

7) கடந்த 25.09.2013 ம் தேதி மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்புமை செய்து ம.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

8) கடந்த 28.05.2025 ம் தேதி மனுதாரர் மேலூர், அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான டிஸ்சார்ஜ் நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி மனுதாரர் மேலூர், அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான டிஸ்சார்ஜ் நகல் ம.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

9) மனுதாரர் வீட்டு லோனிற்கு மாதந்தோறும் தவணை தொகைகள் செலுத்தி வருவதற்கான ஆவணங்கள் நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி மனுதாரர் வீட்டு லோனிற்கு மாதந்தோறும் தவணை தொகைகள் செலுத்தி வருவதற்கான ஆவணங்கள் நகல் ம.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**மனுப்படி உத்தரவாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.**

**( எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.12 15:01:48 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam